செ.வெ. எண் 748 நாள் 23-10-09

தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

<u>பத்திரிகைச் செய்தி</u>

சென்னை, அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து ஹஜ் 2009-ற்கான விமானங்கள் இன்று முதல் (23-10-2009) இயக்கப்படுகின்றன. ஹஜ் விமானங்கள் 2009, அக்டோபர் 23 ஆம் தேதியிலிருந்து 31 ஆம் தேதி வரை இயக்கப்படும். சென்னை விமான தளத்திலிருந்து புறப்படவுள்ள மொத்த புனிதப் பயணிகளின் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| தமிழ் நாடு | 3452 + 6 (குழந்தைகள்) |
| புதுச்சேரி | 274 |
| அந்தமான்-நிகோபார் | 101 |
| மொத்தம் | 3827 + 6 (குழந்தைகள்) |

தமிழ் நாட்டிலிருந்து மொத்தம் 1697 ஆண்கள், 1755 பெண்கள் மற்றும் 6 குழந்தைகள் புனிதப் பயணம் புறப்படவுள்ளனர்.

2. 23.10.2009 அன்று காலை 6.00 மணியளவில் சென்னை, அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து ஹஜ்ஜிற்கான முதல் விமானம் சென்னையிலிருந்து மதீனாவிற்கு சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் பயணம் புறப்பட்டனர். இந்த விமானம் 198 ஆண்கள் மற்றும் 218 பெண்களுடன் மொத்தம் 416 புனிதப் பயணிகளுடன் பயணம் புறப்பட்டனர். மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வக்ஃபு அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்-செயல் அலுவலர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டியின் தலைவர் திரு. முஹம்மது ஹாஷிம், தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டியின் கௌரவச் செயலாளர் திரு. முஹம்மது அப்சல், தலைமை காஜி (சுன்னி) ஹாஜி முஹம்மது சலாவுதீன் அயூப், தலைமைக் காஜி (ஷியா) திரு. குலாம் முஹம்மது மெஹ்தி கான் மற்றும் இதர தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்கள், ஏர் இந்தியா, சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், இந்திய விமானங்களின் ஆணைக்குழு ஆகிய நிறுவனத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டு புனிதப் பயணிகள் நல்ல முறையில் ஹஜ் முடித்து தாயகம் திரும்பி வருவதற்கு துவா செய்து வழியனுப்பி வைத்தனர்.

3. புனிதப் பயணிகளுக்கு இன்டஸ்-இன்ட் வங்கி வாயிலாக அந்நியச் செலாவணி ரொக்கமாக வழங்குவதற்கு விமான நிலையத்தில் சிறப்பு முகப்புகள் திறக்கப்பட்டது. சென்னை, சூளையிலுள்ள தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டியின் கட்டிடம் மற்றும் இணைப்புக் கட்டிடத்தில் வெளியூர் புனிதப் பயணிகளுக்கு தங்குமிட வசதி ஏற்பாடு செ.து கொடுக்கப்பட்டது. ஹஜ் 2009-ற்கு சவூதி அரேபியாவில் புனிதப் பயணிகளுக்கு உதவிடும் பொருட்டு 12 ஹஜ் தொண்டர்கள் அனுப்பப்படுவார்கள்.

4. பல்வேறு மத்திய அரசு நிறுவனங்களான இந்திய விமானங்கள் ஆணைக்குழு, சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, குடியேறுதல், சுங்கம், பியூரோ ஆப் சிவில் ஏவியேஷன் செக்யூரிட்டி, மத்திய பாதுகாப்புப் படை, சென்னை மாநகர காவல், சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி உதவியுடன் தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மிக நல்ல முறையில் ஹஜ் விமானங்கள் இயங்குவதற்காக ஏற்பாடு செய்தது. பர்வீன் டிராவல்ஸ் மூலமாக புனிதப் பயணிகளுக்கு பெயரளவு கட்டணத்தில் போக்குவரத்து வசதி செய்யப்பட்டது.

5. தமிழ் நாடு அரசு இக்குழுவிற்கு நிர்வாக செலவினத்திற்காக ரூ.10.00 இலட்சமும் ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டிடத் தேர்வுக் குழு உறுப்பினர் மற்றும் மானியத்திற்கு ரூ.15.00 இலட்சம் வழங்கியுள்ளது.

6. ஜித்தாவிலுள்ள இந்திய உதவித் தூதரகத்தின் வாயிலாக மக்கா மற்றும் மதீனாவில் தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.

கா. அலாவுதீன், இ.ஆ.ப.,
உறுப்பினர்-செயல் அலுவலர்.

இடம்: சென்னை
நாள் : 23.10.2003

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9